சாலைகூட இல்லை. இருந்தாலும் பல தொழில் முனைவர்கள், என்னுடைய காவேரிப்பட்டிணம் தொகுதியிலிருந்துதான் பல இடங்களில், வேறு இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி சொந்த நிலத்திலேயே அவர்கள் தொழிற் கூடங்களை கட்டுவதற்குரிய ஒரு வாய்ப்பினை செய்து தர இதற்கு முந்தைய அரசுகள் முன் வரவில்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு நிலமும் கிட்டத்தட்ட 30 ஏக்கர் இருக்கிறது. எனவே, முனைவோர் பட்டியலைக் கொடுக்கிறேன். இந்த நிதியாண்டில் இதைக் கொடுக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம், கொளுப்பள்ளியில் சுமார் 86.84 ஏக்கர் அரசு நிலத்தினை சிட்கோவுக்கு அரசு அளிக்க முன்வந்துள்ளது. அங்கே ஒரு தொழில்பேட்டை அமைக்க சிட்கோ உத்தேசித்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய காவேரிப்பட்டிணத்தில்தான் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கு தொழில்பேட்டை அமைக்கப்படுமானால் காவேரிப் பட்டிணம் தொழில் முனைவோர்களுக்கு உதவிகரமாக இருக்கும் பட்சத்தில், 10 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் முன் வருவார்களேயானால், 25 சதவிகிதம் விளிம்பு தொகையோடு அவர்கள் அந்த மனுக்களை விண்ணப்பிப்பார்களானால் சிட்கோ தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்கி தொழில்பேட்டையினைத் துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

441—

அரியலூரில் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடுதல்.

*10443— டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

மூளைக் காய்ச்சல் நோய் தடுக்கும் தடுப்பூசி முறைகள் இந்தியாவில் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும், 1989 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட தடுப்பூசியால் அங்கே தமிழ்நாட்டு குழந்தைகளுக்குப் போடப்பட்டு களப் பரிசோதனை செய்யப்பட்டது. மத்திய அரசு மருந்துகளை மேற்கொண்டு வழங்கும்போது இத்தடுப்பூசி போடப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், develops High fever, Headache, Vomitting and complications like febrile fits, paralysis, respiratory arrest and coma. The child becomes very restles and irritable. With intense medical care சில குழந்தைகள் குணம் அடைகின்றன. ஆனால் ஒரு சில குழந்தைகள் பின்தொடர் விளைவுகளால் முக்கியமான வலிப்பு paralysis of limbs ஆகியவைகளால் பாதிக்கப்படுகின்றன. So, the child becomes mentally retarded, unfit for the society and burden for their parents. அரசு தொட்டில் வைத்து குழந்தைகளை வளர்க்கும் புரட்சிகரமான திட்டத்தைச் செயல்படுத்தி வரும் புரட்சித் தலைவியின் அரசு ஜாப்பனீஸ் மூளைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு மருந்தை இனியாவது அதிகமாக பாதிக்கப்படும் என் தொகுதியிலுள்ள குழந்தைகளுக்கு மட்டுமாவது வருடா வருடம் போட மக்கள் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட மாண்புமிகு மக்கள் நல் வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி மத்திய அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு ஆராய்ச்சி நிலையம் இதற்கான தடுப்பூசியை கொடுத்தார்கள். அந்தத் தடுப்பூசி ஒரு பரிசோதனைக்காக 2 லட்சம் டோசஸ் போடப்பட்டது. அதற்குப் பின்னால் அதனுடைய விளைவுகள் எப்படி இருந்தது என்பதைப் பற்றி ஆராய்ச்சி நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அதிகாரிகளிடத்தில் கேட்டபோது அவர்கள் அவ்வளவு வெற்றிகரமாக இல்லையென்று தெரிவித்தார்கள். இது மத்திய அரசாங்கத்தினுடைய ஆராய்ச்சி நிலையத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இது தொடர்பாக அங்கே ஆராய்ச்சி நடப்பதாகத் தெரிகிறது. எனவே, அங்கிருந்து மீண்டும் அந்தத் தடுப்பூசி மருந்துகளை கொடுக்கிறபோது நாம் பயன்படுத்தலாம். அதற்காக நம்மிடத்தில் இப்போது தனிப்பட்ட முறையில் மருந்து இருப்பதாகத் தெரியவில்லை.

[1993 ஏப்ரல் 23

முற்பகல் 10-55

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அது சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பெயில்யூர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தத் தடுப்பு ஊசி வெரி காஸ்ட்லி. அதை முறைப்படி 3 டோஸ்கள் பயன்படுத்த வேண்டும். முதலில் ஒரு டோஸ் போட்டு, 6 அல்லது 7 மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு அடுத்த 2 டோஸ்களைப் போட்டு, பின்பு ஒரு பூஸ்டர் டோஸ் போட வேண்டும். இது காஸ்ட்லி என்பதால் அதை யாரும் முறையாகப் பயன்படுத்திப் பார்க்கவில்லை. அதனால், பெயில்யூர் ஆகிவிட்டது. எனவே, மீண்டும் அமைச்சரவர்கள் அதைப் பரிசிலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. எனவே, அதிலே என்ன விலை என்பதைப் பற்றி பிரச்சினையில்லை. பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. அப்படி பரிசோதனைக்காகக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் என்ன முறையில் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆராய்ச்சி நிலையத்திலே சொன்னார்களோ, அந்த முறையில் தான் பயன்படுத்தியிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அப்படிப் பயன்படுத்தி, அந்த ரிசல்ட் சரியாக இல்லை. நாம் எதிர்பார்த்த அளவுக்கு அதிலே வெற்றிகரமாக இல்லை என்று அந்த ஆராய்ச்சி நிலையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பல இடங்களில், எங்கெங்கே மூளைக் காய்ச்சல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இதைக் கொடுத்து பரிசோதித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு மத்திய அரசினுடைய அந்த ஆராய்ச்சி நிலையம் மீண்டும் இதைப் பரிசோதித்து, நமக்குக் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்தலாம். நம்மிடத்திலே அதைத் தடுப்பதற்கான எந்த மருந்தும் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 442, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

442—

நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம்.

*11240—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—